செ.வெ.எண்.281 நாள்:05.07.2021

**நீலகிரி மாவட்டம், உதகை சேட் அரசு நினைவு மகப்பேறு மருத்துவமனையில், ரூ.60 இலட்சம் மதிப்பில் ஆக்சிஜன் ஜெனரேசன் யூனிட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, பார்வையிட்டார்.**

---

நீலகிரி மாவட்டம், உதகை சேட் அரசு நினைவு மகப்பேறு மருத்துவமனையில், கொரோமெண்டல் இண்டர்நேஷனல் (முருகப்பா குரூப்ஸ்) மூலம் ரூ.60 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட இரண்டு ஆக்சிஜன் ஜெனரேசன் யூனிட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.07.2021) துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :--

நீலகிரி மாவட்டம், உதகை சேட் அரசு நினைவு மகப்பேறு மருத்துவமனைக்கு, கொரோமெண்டல் இண்டர்நேஷனல் (முருகப்பா குரூப்ஸ்) மூலம் ரூ.60 இலட்சம் மதிப்பில் இரண்டு ஆக்சிஜன் ஜெனரேசன் யூனிட்டினை வழங்கி உள்ளார்கள். இது 1 நிமிடத்திற்கு 200 லிட்டர் கொள்ளளவு கொண்டது. உதகை அரசு மகப்பேறு மருத்துவமனையில் இன்று முதல் இந்த ஆக்சிஜன் ஜெனரேசன் யூனிட் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. முருகப்பா நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் இது இரண்டாவது யூனிட் ஆகும்.

ஏற்கனவே குன்னூர் லாலி மருத்துவமனைக்கு ஏசிடி கிரான்ட்ஸ் நிறுவனம் சார்பில், 1 நிமிடத்திற்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு ஆக்சிஜன் ஜெனரேசன் யூனிட் வழங்கி உள்ளார்கள். உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மூன்றாவது யூனிட் தயாராக உள்ளது. அதே போல் கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய பகுதிகளிலும் ஆக்சிஜன் ஜெனரேட்டர் யூனிட் தயார் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் நீலகிரி மாவட்டம் ஆக்சிஜன் தட்டுப்பாடு இல்லாத மாவட்டமாக அமைய உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி, பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் (மின் பிரிவு) திரு.அப்பர், பொது மேலாளர் (கார்பரேட் மார்கெட்டிங், கொரோமெண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட்) திரு.தினேஷ் குமார், சாய் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் (கோவை) திரு. சண்முகம், மருத்துவர்கள், செவிலியர்கள், தனியார் தொண்டு நிறுவனத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்